MR. SPEAKER : How are we to know what the Central Government have set apart for Harijan Welfare? I do not know whether what the hon. Member is asking is a fact or not. The hon. Member should refer to things which the House is aware of and not to things which the House is not aware of.

SRI P. G. MANICKAM : ஸார், காலேஜில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் இந்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறதா ? அல்லது மற்ற உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் இந்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : ஸ்காலர்ஷிப் இரண்டு வகைகளில் கொடுக்கப்படுகிறது. மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் சேர்ந்து கொடுப்பது ஒரு முறை. மத்திய சர்க்கார் நேரடியாகக் கொடுப்பது மற்றொரு முறை. கிராண்ட்-இன்-எய்டு வரும்போது நாமும் அவர்களும் சேர்ந்து கொடுக்கவேண்டி வரும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Power from Atomic Energy

*986 Q.—SRI A. VEDARATHNAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் அணுக்கதிர் மூலம் மின்சார சக்தி தயாரிக்கும் யோசனை அரசாங்கத்திற்கு உண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH . (*a*) & (*b*) The question of establishing an Atomic Power Station in Madras State has been taken up with the Government of India.

Atomic Generating Centre

*987 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR AND SRI S. LAZAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state the steps taken so far to establish an Atomic Generating Unit?

THE HON. SRI V. RAMAIAH : The attention of the hon. Members is invited to the answer to question No. 986 by Sri A. Vedarathnam.

SRI A. VEDARATHNAM : மத்திய அரசாங்கம் அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்தை நம்முடைய மாநிலத்தில் ஆரம்பிக்க என்ன உதவி செய்யக் கூடும். அதைப்பற்றி நம்முடைய அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது ? இந்த உலைக்கூடம் எப்பொழுது இங்கே துவக்க முடியும் என்பதைத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த " அடாமிக் பவர் " ஸ்டேஷனை நம்முடைய மாநிலத்தில் அமைக்கவேண்டுமென்று நாம் மத்திய அரசாங் கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். நம்முடைய மாகாணத்தில் வேறு வழியில் உற்பத்தியாகக் கூடிய மின்சார சக்தி போதுமானதாக இல்லா விட்டால் அதில் கவனம் செலுத்தி தகுந்த அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய " அடாமிக் பவர் ஸ்டேஷனை " அமைக்க வேண்டும். இப்பொழுது பம்பாயில் ஒரு ஸ்டேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. அது வெற்றிகரமாக நடப்பதைப் பார்த்து அதற்குப் பிறகு மூன்றாவது ஐந் தாண்டுத்திட்டத்தில் இன்னொரு அடாமிக் பவர் ஸ்டேஷன் அமைக்க வேண்டுமென்பது திட்டம். அந்தப் பவர் ஸ்டேஷனை எங்கே அமைப்பது என்று இன்னும் முடிவாகவில்லை. நம்முடைய மாநிலத்தில் தேவை அதிகமாக இருப்பதால் இங்கே அந்த "அடாமிக் பவர்" ஸ்டேஷனை அமைக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம்.